# பொதுக்காலம் 18ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்பிற்கு இனியவர்களே! நிலையற்ற உலக செல்வங்களைப் பற்றிக்கொள்ளாமல் நிலையான செல்வமாகிய விண்ணகத்தை உரிமையாக்கிக் கொள்ள இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

வாழ்வின் மகிச்சியானது இவ்வுலகு தருகின்ற பணத்திலும், செல்வத்திலும் பட்டங்கள், பதவியிலுமே என்று எண்ணிக்கொண்டு அவைகளை அடைய மட்டுமே நம் வாழ்நாட்களைச் செலவிடும்போது நம்மில் செயல்படுவது உலக ஞானமே. ஆகவே நாம் செல்வம் சேர்த்து வைக்க வேண்டிய இடம் விண்ணகமே.

நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நம்மிடம் உள்ளதை தேவையில் இருப்பவர்களோடு பகிர வேண்டும். உள்ளன்போடு, அடுத்தவருக்கு நன்மைகள் ஆற்ற வேண்டும். வீணான உழைப்பாக, செல்வமாக நம் செயல்பாடுகள் அமைந்து விடாமல் மறு உலகிலும் செல்வந்தர்களாக வாழ இறையருள் வேண்டுவோம்.

தற்போதைய நவீன மனிதர்களாகிய நாம் அறிவில் செல்வந்தர்களாகவும், ஞானத்தில் ஏழைகளாகவும் இருக்க இறையாசீர் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

### முதல் வாசக முன்னுரை (சபை உரையாளர் 1: 2; 2: 21-23)

அறிவாற்றலோடும் திறமையோடும் நாம் உழைப்பதும், சேர்க்கும் செல்வங்களும் வீண் என்றும், அவைகளால் நமக்கு அமைதி கிடைப்பதில்லை என்றும் எடுத்துச் சொல்லும் சபை உரையாளரின் வார்த்தைகளைக் கேட்டு வாழ்வை மாற்றிக் கொள்ள இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (கொலோசையர் 3: 1-5, 9-11)

மேலுலகு சார்ந்தவற்றை நாடி உலகப் போக்கிலான இயல்புகளைக் களைய அறிவுரை கூறும் திருத்தூதர் பவுலடியாரின் வார்த்தைகளைக் கேட்டு நம்மில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து கிறித்துவுக்கு உரியவர்களாக வாழ அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா!

எம் திரு அவையின் தலைவர்கள் இயேசுதான் ஒப்பற்ற செல்வம் என்னும் மனநிலையில் வாழ்ந்து, வளர்ந்து அதைப் பிறருக்குப் பறைசாற்ற அவர்களுக்கு உடல், உள்ள, ஆன்ம சுகத்தைக் கொடுத்து காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உண்மையின் இறைவா!

மனித வாழ்வில் எங்கள் மண்ணக செல்வங்களைவிட விண்ணக செல்வத்தை நாடிச் செல்லும் நல்மனதை எங்களுக்குத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மீட்பின் இறைவா!

மனித வாழ்வின் போராட்டங்கள், துன்பங்கள், சோதனைகள் வரும்போது இயேசு நம் மீட்பர் என்னும் உண்மையை அறிந்து வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. எம் அகத்தில் உறைபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் ஊழல், பேராசை போன்ற தீமை தரும் செயல்களை நாடாமல் மக்கள் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு பரந்த உள்ளத்துடன் செயல்பட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com